| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 28.07.2026 | |
| CC No. 5/2025 | |
| சாட்சி :PW7 | |
| பெயர் : திரு. சண்முகசுந்தரம் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. பெருமாள் | தொழில் : காவல் ஆய்வாளர் |
| கிராமம் : புத்தாநத்தம் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 56 /2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் தற்போது புத்தாநத்தம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் துவரங்குறிச்சி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். நான் கடந்த 2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் மேற்படி காவல் நிலைய அலுவலில் இருந்தபோது வளநாடு காவல் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் விசாரணை முடித்து, மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைக்கப்பட்ட வளநாடு காவல் நிலைய குற்ற எண்.206/2023 எனும் வழக்கு கோப்பினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் இறந்துபோன மூக்காயி என்பவரின் உடன் வைக்கப்பட்டிருந்த திருச்சி அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக 21.11.2023 அன்று மதியம் 02.00 மணியளவில் சாட்சியம் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். இறந்தோரின் உடலை இறப்பின் உண்மையான காரணம் அறியும்பொருட்டு, காவலர் சார்லி என்பவர் மூலமாக வேண்டுகோள்கடிதம் கொடுத்து பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவர் கனகஸ்ரீ அவர்கள் வசம் ஒப்படைத்து பிரேத பரிசோதனை முடித்து அவரது உடல் அ.சா.1 யிடம் ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து பிரேத விசாரணை சாட்சிகளான சின்னையா, பிச்சை, வேலுச்சாமி, அழகர்சாமி, பழனிச்சாமி, சார்லி, காவல் உதவி ஆய்வாளர் பிரதீப் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சாட்சிகள் மற்றும் புலன் விசாரணையின் அடிப்படையில் எதிரியின் மீதான குற்றம் உண்மை என தெரியவருவதால் அவரை கைது செய்ய தேடியபோது எதிரி நரேஷ் பாண்டியன்

நிலையம் ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்தேன். இறந்துபோன மூக்காயி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களான அருண், வினித், சந்தோஷ்குமார் உள்ளிட்டோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்கள் வழங்கிய மருத்துவ ஆவணங்களை பெற்றேன். இவ்வழக்கில் வித்திற்கு காரணமான TN 81 B 5729 எனும் இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன தனிக்கைக்காக மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. சத்யா அவர்கள் வசம் ஒப்படைத்து, அவர்கள் இவ்விபத்திற்கு இயந்திர கோளாறு காரணம் இல்லையென வழங்கிய தணிக்கை அறிக்கையை பெற்று அவரின் வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 12.12.2023–ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **மூக்காயி என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடுகள் எண்ணிக்கை–2 அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மூக்காயி என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9, அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மோட்டார் வாகன தணிக்கை அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த விபத்து வழக்கானது சம்பவ தினத்தன்று திருச்சி – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் கைகாட்டி என்ற ஊரில் இருந்து காயம்பட்டு இறந்துபோன நபர் பழுவஞ்சி, கல்லாமேடு வரவேண்டி தார்சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி கடக்கும்போது இந்த விபத்து என்றால் காயம்பட்டு இறந்துபோன நபர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரும்போது எதிரியின் வாகனம் மோதியது. சம்பவம் நடந்த இடம் கைகாட்டியின் உயர்மட்ட பாலத்தின் தென்பகுதி ஆகும். இந்த பாலத்தின் கிழக்கு புறமாக வளநாடு செல்லக்கூடிய ஒரு தார் ரோடு பிரிவு ரோடும், மேற்கு நோக்கி சுக்காம்பட்டி செல்லக்கூடிய வழியில் ஒரு தார் ரோடு பிரிவு ரோடு செல்கிறது என்றால் சரிதான். தார் ரோட்டின் இருபுறமும் வீடுகள், கடைகள் நிறைய உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வடக்குப்பகுதியிலும், தெற்கு பகுதியிலும் சுமார் 150 மீட்டர் தள்ளி தார் சாலையை கடப்பது என்றால் தேசிய நெடுஞ்சாலை அங்கீகரிக்கப்பட்ட டிவைடட் பாதை உள்ளது என்றால் சரிதான். இந்த பாலத்திற்கான அறிவிப்பு பலகை இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தின் தார் சாலையில் வடக்குப்பகுதியிலும், தெற்குப்பகுதியிலும் தேசிய நெடுஞ்சாலையால் அங்கீகரிக்கப்பட்ட உயர்மட்ட பாலம் உள்ளது என்றும், மேலும் தார்சாலையின் மேற்கு பகுதியிலும், கிழக்குப்பகுதியிலும் அணுகு சாலை உள்ளது என்றும், விளம்பரப்பலகை உள்ளது என்றால் சரி. பார்வை மகசரில் சாட்சிகள் இருசக்கர வாகனத்திற்கு என்ன சேதாரம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை

என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு இரண்டு நாட்கள் கழித்து சென்றேன். இந்த வழக்கின் கோப்பை ஒப்படைத்த உதவி ஆய்வாளரிடமிருந்து சம்பவ இடம் சம்பந்தமான போட்டோ எதுவும் நான் கேட்டுப்பெறவில்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்ற பிறகு அந்த இடத்தில் உள்ள கடைகள், வீட்டிற்கு போய் அருகில் உள்ள கடைக்காரர்களிடமும், வீடுகளிடமும் விசாரித்து சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணமே காயம்பட்டு இறந்துபோன நபர் தார் ரோட்டை கடக்கும்போது உரிய பகுதியில் கடக்காமல், எவ்வித கவனமுமின்றி திடீரென தார் சாலையை மேற்கிலிருந்து, கிழக்காக எவ்வித சைகையும் காட்டாமல் கடக்க முற்பட்டதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இறந்துபோன நபருக்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டும் என்ற காரணத்திற்காக சம்பவத்தின் தன்மையும், வழக்கின் சம்பவ இடத்தை மறைத்து நிலையத்தில் இருந்துகொண்டே எல்லா ஆவணங்களையும் தயாரித்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. காயம்பட்டு இறந்துபோன நபர் சம்பவ தினத்தன்று தேசிய நெடுஞ்சாலையால் அங்கீகரிக்கப்பட்ட பகுதியில் சாலையை கடந்தால் இந்த விபத்து நடந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. பொய்சாட்சி என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.